## ‘செம்மொழி நாள்’ விழாவையொட்டி நடந்த

# கலை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, ஆக.2-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம் பெற்று தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன்- 3 ஆம் தேதியை தமிழ்நாடு அரசு செம்மொழி நாள் விழாவாக அறிவித்து கொண்டாடியது.

இதனையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் ஆதித்தொன்மையும் இலக்கண வளமையும், இலக்கிய செழுமையும் நிறைந்த தமிழ் மொழி குறித்து, செம்மொழியான தமிழ்மொழியாம் என்ற தலைப்பில் 5 பிரிவுகளில் கலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டன. அதில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற 34 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதங்கங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

வரலாற்று அறிஞர்கள் தமிழின் பிறப்பை கி.மு. 4 ஆம் நூற்றாண்டு என்று தெரிவிக்கின்றனர். ஆனால், “கல்தோன்றி மண் தோன்றா காலத்தோடு முன் தோன்றி மூத்தகுடி” என்பது தமிழ் சான்றோர்களின் கருத்து. தமிழின் தொன்மையான படைப்புகளான தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கண நூல்களும், திருக்குறளும், சங்க இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, ஐம்பெரும் காப்பியங்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் உள்ளிட்ட பல ஆயிரம் நூல்கள் தமிழ் உலகத்திற்கு அளித்திருக்கும் கொடையாகும் மேலும் செந்தமிழ் நவீன இலக்கியத்திலும் தனது தனித்த முத்திரை பதித்து வருகிறது. கணினி யுகத்திலும் தமிழ் மொழி தனது ஆளுமையை செலுத்தி வருகிறது.

மொழி வளமும் கவித்துவ அழகியலும் கொண்ட தமிழ் மொழிக்குப் பெருமைச் சேர்க்கும் வண்ணம் முத்தமிழிஞர் கலைஞர் அவர்கள் 2004 ஆம் ஆண்டு செம்மொழி ஆங்கீகாரம் பெற்று தந்தார். கோவையில் செம்மொழி மாநாட்டையும் நடத்தினார். தமிழ் எழுத்தையும்- பேச்சையும் இறுதி வரை தனது மூச்சாக கொண்டு வாழ்ந்த தமிழ் கடல். தெற்கே உதித்த ஒளி குன்றாத சூரியன். உலகம் போற்றும் உன்னத அரசியல் தலைவர். தமிழ் வளர்ச்சிக்கு பெரும் தொண்டு ஆற்றியவர். பல நூல்களை எழுதியவர். இத்தகைய அவரின் பெரும் பணிகளையும் செம்மொழியான தமிழ் மொழியைப் போற்றும் வகையிலும் செம்மொழி தமிழாய்வு நிறுவனம் ஆண்டுதோறும் சிறந்த தமிழ் அறிஞர் ஒருவருக்கு செம்மொழி விருது வழங்கி வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன்- 3 ஆம் தேதியை செம்மொழி நாளாக அறிவித்து தமிழ்நாடு அரசு கொண்டாடி வருகிறது.

இத்தகைய செம்மொழிக்கு மேலும் பெருமைச் சேர்க்கும் விதமாகவும், முத்தமிழறிஞரின் பெரும் தமிழ் தொண்டை போற்றும் வகையிலும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் ”செம்மொழியான தமிழ்மொழியாம்” என்ற தலைப்பில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்கு பெறும் வகையில் கலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டன அதில், சொற்பொழிவுப் போட்டியில் 450 நபர்களும், கவிதைப் போட்டியில் 875 நபர்களும், வினாடி வினாப் போட்டியில் 1021 நபர்களும், அறநெறிக்கதைகள் போட்டியில் 1020 நபர்களும், என்னுள் இருக்கும் கலைஞர் போட்டியில் 920 நபர்களும், என ஆக மொத்தம் 4286 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் 34 நபர்கள் வெற்றி பெற்றவர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (01-08-2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில், பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்து அனைவருக்கும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜராம், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) முனைவர் இரா.பாஸ்கரன், ஊடக ஒருங்கிணைப்பாளர் தி. செந்தில்வேல் செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள் மற்றும் ஊடக மைய அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு – திருப்பூர் – நாமக்கல் போன்ற ஊரக மாவட்டங்களில்

# ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ வீரர்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கிகள் எவ்வளவு?

### மக்களவையில் கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக.2-

மக்களவையில் ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் எழுப்பிய கேள்விகளும் ஒன்றிய அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு:-

(அ) ஒரே தரத்தில் ஓய்வூதியம் (OROP) திட்டம் தற்போது எவ்வாறு நடைமுறையில் இருக்கிறது? இதுவரை எத்தனை வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பதைத் தெரிவிக்கவும்.

(ஆ) ஓய்வூதியம் காலதாமதமின்றி வழங்குவதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் SPARSH இணையதளத்தில் எவ்விதமான தொழில்நுட்ப / நிர்வாக மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்கவும்.

(இ) தமிழ்நாட்டின் ஈரோடு, திருப்பூர், நாமக்கல் போன்ற ஊரக மாவட்டங்களில் ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவ வீரர்களுக்கு கொடுக்க வேண்டிய ஓய்வூதிய பாக்கிகள் எவ்வளவு உள்ளது என்பதைத் தெரிவிக்கவும்.



ஒன்றிய அரசின் பதில் வருமாறு:-

(அ) பாதுகாப்புப் படைகளின் ஓய்வூதியத் தொகை 01.07.2014 முதல் One Rank One Pension (OROP) திட்டத்தின் கீழ் ஐந்தாண்டு ஒருமுறை திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. இதன் அடிப்படை யில், இரண்டாவது மற்றும் மூன்றாவது ஓய்வூதியத் திருத்தங்கள் 01.07.2019 மற்றும் 01.07.2024 ஆகிய தேதிகளில் அமல்படுத்தப்பட்டு உள்ளன. OROPI மற்றும் OROPII திட்டங்களின் அடிப்படையில் நிலுவையில் இருந்த தொகைகள் தகுதியுடைய பாதுகாப்புப் படை ஓய்வுபெற்றவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. OROPIII திட்டத்தின் கீழ், திருத்தப்பட்ட ஓய்வூதியத் தொகையும் அதற்கான நிலுவைத் தொகையும் 25.20 லட்சம் தகுதியான ஓய்வுபெற்ற பாதுகாப்புப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளில் SPARSH போர்டலில் செய்யப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிர்வாக முன்னேற்ற ங்கள் விவரங்கள் பின்வருமாறு:

(i) SPARSH (System for Pension Administration - Raksha) என்பது ஒன்றிய அரசின் Digital India திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது அக்டோபர் 2020 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் பாதுகாப்பு படை மற்றும் பாதுகாப்பு துறை சிவிலியன்களுக்கான ஓய்வூதியங்களை அனுமதிப்பதும் நேரடியாக அவர்களது வங்கி கணக்குகளுக்கு செலுத்துவதும் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது. இது ஓய்வூதிய நிர்வாகத்தை முழுமையாகவும். வெளிப்படையாகவும், சுலபமாகவும் செய்து தரும் ஒரு அமைப்பாக செயல்படுகிறது.

(ii) தற்போது, 31 லட்சத்துக்கும் அதிகமான பாதுகாப்புப் படை ஓய்வுபெற்றவர்கள் (சேவை உறுப்பினர்கள் மற்றும் பாதுகாப்புத் துறையில் பணியாற்றிய சிவிலியன்கள் உட்பட) SPARSH போர்டலில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் ஓய்வூதியத் தொகைகள் SPARSH மூலம் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படுகின்றன.

(iii) கடந்த இரண்டு ஆண்டுகளில் SPARSH போர்டலில் உருவாக்கப்பட்ட முக்கியமான வசதிகள் பின்வருமாறு:

(அ) Reservist Pension
(ஆ) Invalid Pension
(இ) Prorata Pension for PBOR
(ஈ) LTA (Life Time Arrears)
(உ) Fixed Medical Allowance (FMA) updation
(ஊ) IT saving for Jeevan Raksha Padak
(எ) Integration with TRACES for Form16

(iv) நேபாளத்தை பூர்வீகமாகக் கொண்ட Gorkha (NDG) ஓய்வுபெற்றவர்கள் இப்போது SPARSH வாயிலாக ஓய்வூதியம் பெற முடியும். இவர்கள் தற்போது Nepal SBI Bank மற்றும் Everest Bank Ltd. வாயிலாக ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர். NDG மற்றும் NRI ஓய்வுபெற்றவர்களுக்கு உதவ SPARSH சேவையை விரிவுபடுத்தும் நோக்கில், ஒரு தனிப்பட்ட Email ID உருவாக்கப்பட்டுள்ளது.

(v) SPARSH போர்டலில் செய்யப்பட்ட முக்கிய தொழில்நுட்ப மேம்பாடுகள்,

இணைப்பு வேகம் 256 MBPS ஆக அதிகரிக்கப்பட்டு, சேமிப்பு வசதி 600 GBயிலிருந்து 200 TB ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், Mobile Applicationயும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

(இ) தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மாவட்டங்களில் வசிக்கும் ஓய்வு பெற்ற பாதுகாப்புப் பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஓய்வூதிய நிலுவைத் தொகை தொடர்பான தனியான தரவுகள் இல்லை.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. ஆலோசனை வழங்குகிறார்!

# சென்னை மேற்கு மாவட்ட வர்த்தக அணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் ஏ.விஜயராஜ் அறிக்கை!

சென்னை, ஆக. 02

சென்னை மேற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.விஜயராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. வர்த்தக அணி புதிதாக நியமனம் செய்யப்பட்ட பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் இன்று (02.08.2025 சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில், மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே இக்கூட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி தலைவர், துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், புதிதாக நியமனம் செய்யப்பட்ட பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.விஜயராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.






பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி 22வது மற்றும் 25வது வார்டுகளில் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 19.40 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்களை (R.O.Plant)பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அவர்கள் திறந்து வைத்து குறைகளையும் கேட்டறிந்தார்.. உடன் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர் ஆர்.எஸ். செந்தில்குமார், வட்டக் கழக செயலாளர்கள் எம்.நாகராஜ், எம்.சார்லஸ், பகுதி கழக நிர்வாகிகள் டி.கார்த்திக் ஆர்.கோமதி மாநகராட்சி அதிகாரிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.08.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | தூத்துக்குடி தெற்கு | சத்யா மஹால், புதுக்கோட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–2–இல் ஆவடி, மண்டலம்–9–இல் ஓட்டப்பிடாரம், திருச்செந்தூர் மற்றும் திருவைகுண்டம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | ஆவடி | ஜெய் கிரீஷ் திருமண மண்டபம், தண்டுரை, பட்டாபிராம், திருவள்ளூர். |
| 09.08.2025 சனிக்கிழமை | மாலை 3.00 மணி | ஓட்டப்பிடாரம் | சத்யா மஹால், புதுக்கோட்டை. |
| 10.08.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | திருச்செந்தூர் | ஐ.எம்.ஏ. மஹால், திருச்செந்தூர். |
| | மாலை 3.00 மணி | திருவைகுண்டம் | மல்லிகை மஹால், ஆத்தூரான்கால். |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 30.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


## தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்த பொதுமக்கள்

# மாதவரத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் மனு கொடுத்த 24 மணி நேரத்தில் குடிநீர் குழாய் இணைப்பு!

### பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் திறந்து வைத்தார்!

மாதவரம், ஆக. 2-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்குப்பகுதி 17வது வட்டத்தில் தமிழ்நாடு அமைச்சரின் சீரிய திட்டமான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் மனு கொடுத்த 24 மணி நேரத்தில் தங்கள் பகுதிக்கு குடிநீர் குழாய் வசதி ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு மாதவரத்தில் பொதுமக்கள் நன்றி தெரிவித்து ஆரவாரம் செய்தனர்.

மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வட்டம் கொசப்பூர் பகுதியில் அடங்கியது ஆஞ்சலோ நகர்.இந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் குடிநீர் வசதி இன்றி கடந்த 15 வருடங்களாக தவித்து வந்தனர். சரியான சாலை வசதி இல்லாமல் இருந்தது. இதை கடந்த ஆண்டு திராவிட மாடல் ஆட்சி உடனடியாக சாலை வசதியை ஏற்படுத்திக் கொடுத்தது.

குடிநீர் வசதி இல்லாமல் இருந்த பொதுமக்கள் கடந்த 31ஆம் தேதி கொசப்பூர் மாநகராட்சி பள்ளி நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அறிவுறுத்தலின்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் அதிகாரிகளிடம் தங்கள் பகுதிக்கு குடிநீர் குழாய் வேண்டும் என்று மனு கொடுத்தார்கள். இந்த முகாமில் கலந்து கொண்ட மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம் எம்எல்ஏ அனைத்து மனுக்களின் மீதும் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மனுவை பெற்றுக் கொண்ட மணலி மண்டல சென்னை குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் திருமதி பிரதீபா அவர்கள் துரித நடவடிக்கை மேற்கொண்டு, பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்த பகுதிக்கு நேரில் சென்று பகுதி செயலாளர் புழல் நாராயணன், வட்ட செயலாளர் கருணாகரன் ஆகியோருடன் பார்வையிட்டு, சுமார் 150 மீட்டர் நீளமுள்ள சாலையில் ஜேசிபி இயந்திரம் மூலம் பள்ளம் எடுத்து குடிநீர் குழாய்கள் பதித்து மனு கொடுத்த 24 மணி நேரத்திற்குள் குடிநீர் வர ஏற்பாடு செய்து கொடுத்தார்.

மேற்படி அமைக்கப்பட்ட குடிநீர் குழாய்களை காலை முதல் மாலை வரை வேலை செய்த குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்கள் அன்பு, செல்வம் ஆகியோர் உடனிருந்து பணிகளை துரிதப்படுத்தினார்கள்.

அவ்வாறு மனு கொடுத்த 24 மணி நேரத்தில் அமைக்கப்பட்ட குடிநீர் குழாய்களை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் திறந்து வைத்தார். 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி. பாலாஜி, பாக முகவர் சுமித், விஷ்ணு உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

தங்கள் பகுதிக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு குடிநீர் குழாய் வந்ததை கொசப்பூர் ஆஞ்சலோ நகர் பகுதி மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மேலும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடத்தி 24 மணி நேரத்தில் தீர்வு கண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும் சென்னை குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், கழகத்தினருக்கும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

# நாவலர் நெடுஞ்செழியன் புதல்வர் மதிவாணன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.2-

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் புதல்வர் மதிவாணன் (வயது 65) உடல்நலக் குறைவினால் மறைவெய்தினார். அவரது மறைவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற மதிவாணன் அவர்கள் கடந்த சில நாட்களாக உடல் நலமில்லாமல் இருந்தார். இந்நிலையில் நேற்று மறைவெய்தினார்.

தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் புதல்வர் மதிவாணன் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். மறைந்த அன்னாரது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மறைந்த அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று மரக்காணத்தில் நடைபெறுகிறது.



மாதவரம் சட்டமன்றத் தொகுதி 17வது வட்டம் கொசப்பூர் ஆஞ்சிலோ நகர் பகுதியில் பல ஆண்டுகளாக குடிநீர் குழாய் இல்லாமல் அவதிப்பட்ட மக்களுக்கு, கொச ஊரில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கொடுத்த மனுவின் அடிப்படையில் 24 மணி நேரத்தில் சென்னை குடிநீர் வழங்கல் செயற்பொறியாளர் பிரதீபா அவர்களின் மேற்பார்வையில் அமைக்கப்பட்ட புதிய குடிநீர் குழாய்களை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் திறந்து வைத்தார். 17 வது வட்ட செயலாளர் கே. கருணாகரன், சி. மூர்த்தி, சி.பாலாஜி, டி.திவாகர், பாக முகவர் சுமிர், விஷ்ணு உள்ளிட்ட பொதுமக்கள் பலர் உடன் உள்ளனர்.